# வள்ளுவரின் பொருளியல் கொள்கை – ஓர் ஆய்வு

**K.P. அழகம்மை**

**I. வள்ளுவரின் பொருளியல் கொள்கை:** வாழ்க்கைக்குப் பொருள் தேவை என்ற கொள்கையில் பொருளியல்வாதியாகக் கருத்துரைக்கும் வள்ளுவர், அப்பொருளை எந்த அடிப்படையில் ஈட்ட வேண்டும், எப்படி, எதற்குச் செலவு செய்ய வேண்டும் என்பன பற்றிய கருத்துக்களில் பொருளியலறிஞர்களினின்றும் மாறுபட்ட பாதையை வகுத்துக் கொடுக்கின்றார். பொருளியலறிஞர் மற்றவை மாறாவிருக்கும் சூழலில் என்ற எடு கோளை வைத்து, பொருள் பற்றிய இலக்கணம் வகுக்க, வள்ளுவரோ மாறுபடுவதையே இயல்பாகக் கொண்டுள்ள மனத்தை, அதனால் மட்டுமே இயக்கம் கொள்ளும் அறத்தை முதன்மையாகக் கொண்டு பொருள் ஈட்ட வேண்டும் என்றுரைக்கின்றார். வள்ளுவரின் அறவழிச் சிந்தை அடிப்படையிலான பொருளியல் கொள்கைகள் இங்கு ஆய்வுக்கு உட்படுகின்றன.

**பொருளியல் கொள்கை:** பொருளியல் என்பது பொருட்களின் கிடைப்பருமை பற்றியதும், அதன் தீர்வுக்கான வழிமுறைகளும் பற்றிய ஆய்வாகும் என்றுரைப்பர் பொருளியலறிஞர். ஆயின் வள்ளுவரின் பொருளியல் கொள்கை பொருளுக்காக, புற வாழ்வு வசதிக்களுக்காகப் பொருள் என்று அமைக்கப்படவில்லை. பொருளின் அவசியத்தை உணர்ந்த “செய்க பொருளை” (759) என்று அறுதியிட்டுக் கூறுகின்றார். ஆயின் எதற்காகச் செய்ய வேண்டும் என்பதற்கான விளக்கம் பொருளியலறிஞர்களின் இலக்கணத்தினின்றும் மாறுபடுகிறது. எக்காலத்தும், எந்நாட்டவர்க்கும், எச்சூழலிலும் பொருந்தக் கூடிய நிலையில் இவரின் பொருளியல் கொள்கை அமைந்துள்ளது.

**II. வள்ளுவரின் மக்கள் நலன்சார் பொருள் கொள்கை:** பொருளல்லவற்றைப் பொருளாகச் செய்யும், எல்லோராலும் சிறப்புறுத்தப் பெறும், இருளறுக்கும், மனத்திண்மை தரும், பகைவர் செருக்கருக்கும் (751-766) என்றெல்லாம் பொருளின் சிறப்புப் பற்றிக் கூறுகிறார். தீதின்றிச் சேர்த்த பொருள் அறத்தையும் இன்பத்தையும் பிறப்பிக்கும் என்பதை

அறன் ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள் - 754.

அருள் என்னும் அன்பீன் குழவி பொருள் என்னும்
செல்வச் செவிலியால் உண்டு – 757.

ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்(கு) எண்பொருள்
ஏனை இரண்டும் ஒருங்கு – 760.

என்று மூன்று குறட்பாக்களில் உரைக்கின்றார். இம்மூன்று குறட்பாக்களும் வாழ்வின் குறிக்கோள், பொருள் ஈட்டலின் குறிக்கோள், அறமும் அதன்வழி உருவாகும் இன்பமும்தான் என்பதையே அழுத்தமாக உரைக்கின்றன. இங்கு இன்பம் என்பது இவ்வுலக வாழ்வைத் துய்க்கும் பருப்பொருள் (Materialistic)சார்ந்த இன்பத்தையல்லாது அறத்தால் பிறக்கும் இன்பத்தையே சுட்டுகிறது. அறமும் இன்பமும் கிடைக்கும் என்றில்லாது ஈனும் என்று ஆழ்ந்த கருத்துடன் யாத்துள்ளார். மனிதப் பண்புடன் செல்வம் சேர்த்தலில் அறமும் இன்பமும் இயல்பாகப் பிறக்கும் என்பதையே மறைமுகமாகச் சுட்டி உணர்த்துகின்றனர். அதனாற்றான் செல்வத்துக்குத் “தாய்” என்ற முதன்மை கொடுக்காது “செல்வச் செவிலியால் உண்டு”, அருள் என்னும் அன்வீன் குழவி (757) என்று செல்வத்தை செவிலி என்ற ரீதியில் இரண்டாந்தரப்படுத்துகின்றார்.

வள்ளுவரின் பொருளாதாரக் கொள்கைகளை முழுமையாக உணர தொன்மைப் பொருளியல்வாதிகளின் கருத்துக்களை ஊன்றிப் பார்த்தல் அவசியமாகிறது. (சடகோபன். கோ.இ பொருளாதாரக் கொள்கைகள், ப. 2-10)

ஆடம் ஸ்மித் (Wealth Definition)தனிமனிதன் ஒவ்வொருவனும் தன்னல முனைப்புடன் செல்வம் ஈட்ட முயலுகிறான். அவ்வாறு முயலும்போது நாடுகளின் செல்வம் தானாவே உயரும்.

ஆல்பிரட் மார்ஷல் (Welfare Definition): பொருளாதாரம் அல்லது அரசியல் பொருளாதாரம் சாதாரண மனிதன் அன்றாட வாழ்க்கையில் எவ்வாறு ஈடுபடுகிறான்

என்பதை ஆராய்கின்றது. நல்லாழ்வுக்குத் தேவையான பொருள்களை எப்படிப் பெறுவது? எப்படிப் பயன்படுத்துவது? ஆகிவற்றோடு நெருங்கிய தொடர்பு கொண்ட தனிமனிதன், சமுதாயம் இவற்றின் நடவடிக்கைகளைப் பற்றி ஆராய்கின்றது.

இலயனல் ராபின்ஸ் (Scarcity Definition): பொருளியல் என்ற அறிவியல் விருப்பங்களுக்கும் மேலும் பலவித பயன்களுக்கும் பயன்படுத்தக் கூடிய, பற்றாக்குறையான சாதனங்களுக்கு இடையே இருக்கின்ற மனித நடவடிக்கைகளைப் பற்றிக் கூறுகின்றது.

சாமுவேல்சன் (Growth Definition): நாட்டில் கிடைக்கின்ற பற்றாக்குறையான சாதனங்களைக் கொண்டு எந்த அளவு பல்வேறு பண்டங்களை உற்பத்தி செய்வது, அப்படி உற்பத்தியாகின்ற பண்டங்களை எவ்வாறு பகிர்ந்தளிப்பது எவ்வாறு பகிர்ந்தளிப்பது என்ற முடிவுகளை சமுதாயம் செய்து கொள்ள வேண்டிய உள்ளது. இவைகளை ஆராய்வதே பொருளியலின் முக்கியப் பணியாகும்.

இக்கருத்துக்களை வள்ளுவரின் பொருள் பற்றிய கருத்துக்களுடன் வைத்துப் பார்க்கும் நிலையில் அடிப்படைச் சிந்தை முழுமையாக மாறுபட்டுத் திகழ்கிறது. ஆயின் ஹேட்ரே (Hawtry) போன்றோரின் கோட்பாடுகள் வள்ளுவத்தை ஒட்டி அமைந்துள்ளது. இவை அறத்திற்கும் ஒழுக்கத்திற்கும் முதலிடம் கொடுத்துப் பேசுகின்றன. பொருளியல் மனிதனோடு தொடர்புடையதாலினால் அறத்தோடு பொருந்தத்தான் ொபருள் சேர்க்க வேண்டும் என்றுரைக்கின்றார். அறச்சார்ப்படைய (Normative science)இக்கொள்கை பற்றிப் பேசும் முருகன் மேனாட்டாரிடையே பொருளியல் என்பது பொருளை அடிப்படையாகக் கொண்டதா? அறத்தை அடிப்படையாகப் கொண்டதா? என்பதில் கருத்து வேறுபாடு உண்டு என்றுரைக்கிறார். ஆயின் வள்ளுவரின் பொருளியல் என்பது கொள்கை அறத்தையும் அதுசார்ந்த நலத்தையும் மட்டுமே பொதுவான அடிப்படையாகக் கொண்டுள்ளது. இக்கருத்து “திருக்குறள் ஒவ்வொரு கருத்தையும் எடுத்து குறிப்பாகப் பேசுவதில்லை. அது பேசுவதெல்லாம் மிகமிகப் பொதுவாகப் பேசுதல்தான்” என்ற முருகரத்தினத்தின் கூற்றலால் உறுதி பெறுகிறது.

**III. பொருள் பற்றிய சிந்தை: பிறர் நலம் பேணப் பொருள்:** ஒப்புரவறிதல் அதிகாரத்தில் வள்ளுவரில் பொருள் பற்றிய சிந்தை பொருளியலறிஞர்களின் கோட்பாடுகளுக்கு அப்பால் செல்கிறது. இங்கு தனக்காக, தந்நலத்திற்காகப் பொருள் என்ற சிந்தை பதிவாகவில்லை. சேர்க்கும் பொருள் பிறர்நலத்திற்காக என்ற குரலாகவே ஒலிக்கிறது. 1) பொருள் எதற்கு? தக்கார்க்கு வேளாண்மை செய்தற்பொருட்டு. 2) பேரறிவாளன் திரு – ஊருணி நீர் நிறைந்தற்று. (உலகம் வாழவிரும்பும் ஒப்புரவுப் குணம் மிக்கப் பேரறிஞனின் செல்வம் ஊர்மக்கள் நீர் உண்ணும் ஊருணி நீரால் நிறைந்தது போன்றதாகும்). 3) செல்வம் நயனுடையார் கண்படின் பயன் மரம் உள்ளூர் பழுதற்றது போன்றது. 4) பெருந்தகையார் செல்வம் ஊர்மக்கள் நீர் உண்ணும் ஊருணி நீரால் நிறைந்தது போன்றதாகும்). 5) ஒப்புரவினால் வறுமையே வருமாயின், ஒப்புரவாளன் தன்னை விற்றாவது அந்த வறுமையை வாங்கிக் கொள்வானாம் என்று பொருள் ஈட்டல், பிறர் நலன் பேணுதற்காக என்பதை உறுதிசெய்வதாக அமைந்துள்ளது.

பொருள் = அருள், சமன்பாடு

பொருள் இல்லாதவர் இவ்வுலகில் வாழ முடியாதது போல் அருள் இல்லாதவர்கட்கு அவ்வுலக வாழ்வு இல்லாமல் போய்விடும் (247) என்றுரைக்கின்றார். ஈன்றாளே பசித்துன்பத்தால் வருந்தினும் சான்றோர் பழிக்கும் வினை செய்யற்க என்கின்றார் (656) பிறர் அழும்படியாகச் செய்து கவர்ந்த பொருள்கள் எல்லாம் அவர் அழும்படியாகச் செய்து போய்விடும் (659) என்ற கருத்துக்கள் உணர்த்தும் பொருள் தான் என்ன? பொருள் அருளுக்காக, அருள் அடிப்படையில் மட்டுமே தேடப்பட வேண்டும், செலவழிக்கப்படவும் வேண்டும். அது அல்லாத பருப்பொருள் பொருளன்று என்ற உள்ளுணர்த்தல் பொருள் என்றால் அருள் என்றால் பொருள் என்ற சரிவிகித சமன்பாட்டையே உணர்த்துகிறது.

**IV. உற்பத்திக் காரணிகளில் நலம்பேணும் சிந்தை:** பொருளியல்வாதிகள் கூறும் பெருளதாரத்தின் இன்றியமையா உற்பத்திக் காரணிகளான நிலம், உழைப்பு, மூலதனம், தொழிலமைப்பு (நிர்வாகம்) ஆகியன பற்றியும் வள்ளுவம் உரைக்கின்றது.

ஆயின் மொத்தச் சமுதாயத்தின் இயங்கு நிலையை வைத்தும், மக்கள் நலனைக் கருவாகக் கொண்டுமே கருத்துக்கள் பதிவாகியுள்ளன. இங்கும் அறமும், அருளும் அழுத்தம் பெறுகின்றன.

**நிலம்:** பொருளியலறிஞர்கள் நிலத்தில் அனைத்து இயற்கை வளங்களையும் உட்படுத்துவர். செழிப்புத்தன்மையால் மாறுபாடுடையது என்றும் குறைந்து செல் விளைவு விதிக்கு உட்பட்டது என்றும் உரைப்பர். ஆயின் வள்ளுவரோ நிலம் என்று தனித்துரைக்காது நாடு என்று உரைக்கின்றார். அதில் நீர் வளத்தின் இன்றியமையாமையையும், இணைத்துப் பேசுகின்றார்.

தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு (731)

என்ற குறட்பாவின் கருத்தில் பொருளியலறிஞர் கூறும் குறைந்து செல்விளைவு விதிக்கு இடம் கொடுக்கவில்லை. இவருடைய கருத்து அறிவியல் ரீதியாக அமைந்துள்ளது. குறையாது விளைச்சல் உடையது நாடு என்று நாட்டுக்கு இலக்கணம் வகுக்கும் வள்ளுவர் அதற்கான அடிப்படையையும் படிநிலைப்படுத்தி உரைக்கின்றார். தக்கார், (மக்களால் தகுதியுடையோராய்க் கருப்படுபவர்) தாழ்வற்ற செல்வங்கள் உடைமை, ஆகியன பற்றிப் பேசுகின்றார். இதன் பொருளாதரம் என்ன? மக்கள் தக்வராக இருப்பினர் — வள்ளுவரின் கருத்துப்படி, தக்கார் என்பவர் மனந்தூயர் (456), மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம் (457) மனநலம், இனநலம் (1458), 459 என்ற குறட்பாக்கள் வழி பிறர் நலம் போற்றும் சிந்தை உடையவர், தாழ்வற்ற செல்வர் என்பதும், தாழ்வான செயல்களில் ஈடுபடாது நேர்மை வழியல் அறவழியில் ஈட்டிய செல்வம் உடையவர் என்பதும், இப்படிப்பட்ட மனிதாகள் இருக்கும் நாட்டில் சிந்தையும், பேச்சும், மூச்சும் நல்லதாக அமைய — தூய்மையான காற்றும் அதன் ஈர்ப்பும் இயற்கை வளம் இயல்பாகச் செழிக்கும்: மழையும் பெய்யும் - தள்ளாத விளைச்சல் இயல்புறும் நிலம் சிறப்புடையதாக நாடும் சிறப்புறும் என்று நிலம் பற்றிய கருத்துக் தொடர்பு அமைந்து சிறக்கின்றது.

**உழைப்பு:** உழைப்பை உழைப்பாளிகளிடமிருந்து பிரிக்க இயலாதது. அழியக்கூடியது. உழைப்பின் அளிப்பு மாறுதலுக்குட்பட்டது என்பது பொருளறிஞர்களின் கருத்து. வள்ளுவர் உழைப்பை ஆள்வினை உடைமை என்றுரைக்கின்றார். எக்காலச் சூழலுக்கும் ஏற்புறும் வகையில், அவர் வாழ்வுச் சூழலில், உழவுக்கு முதன்மை கொடுத்துப் பேசுகின்றார்.

சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை (1031)

என்று உரைக்கின்றார். இங்கும் அறமும், அருளும் மறைமுகமாக உணர்த்தப்பெறுகிறது. எத்தனை தொழில் செய்து பணத்தை ஈட்டினும் அதனை உண்ண முடியாது. உயிர் வாழ அடிப்படையான உணவைத் தருவது உழவுத்தொழில். அதனால் அருள் உணர்ந்து, வருந்தி உழைக்க நேரினும் உழவுத் தொழிலே தலைமையான தொழில். அதுவே உலகத்தார்க்கு ஆணி என்றெல்லாம் கூறுகின்றாார். இங்கும் உணவுக்கான உழைப்புக்கு முதலிடம் கொடுப்பது மனநலத்தின்பாற்பட்ட பருப்பொருள் சார்தலில்லாத சிந்தையாகும். இங்கும் பொருளியலறிஞரினின்றும் விலகித் தம் விழுமிய கருத்தால் தனித்து நிற்கின்றார் வள்ளுவர்.

**பொருள் (மூலதனம்):** பொருளியல்வாதிகள் “முதல்” என்று கூறும் கருத்தாக்கக் கூறமைந்த சொல்லை வள்ளுவர் இரு குறட்பாக்களில் பதிவாக்கியுள்ளார்.

முதல் இலார்க்கு ஊதியம் இல்லை மதலையம்
சார்பிலார்க்கு இல்லை நிலை (குறள்: 449)
ஆக்கம் கருதி முதல் இழக்கும் செய்வினை
ஊக்கார் அறிவுடை யார் (குறள்: 463)

இவற்றின் பொருள் 1) முதல் இல்லையென்றால் அதனால் வரும் இலாபம் இல்லை 2) இருக்கின்ற முதலைப் பின்வரப்போகும் இலாபத்தை எண்ணி இழக்கக்கூடாது என்று முதல் பற்றிய முதன்மைக் கருத்தையும் அதனைக் காப்பாற்ற வேண்டிய இன்றியமையாமையையும் அழுத்தமாகக் கூறியுள்ளார். ஆயின்

அம்முதலுக்கு இணையாக உவமிக்கப்படுவது அறிவுடையார் செயலும் துணையும் ஆகும். இந்த அறிவுடையாரும் வள்ளுவர் கருத்துப்படி

அறிவினுள் எல்லாந் தலையென் பதீய
செறுவார்க்கும் செய்யா விடல் (குறள்: 203)
அறவற்றங் காக்கும் கருவி செறுவார்க்கும்
உள்ளழிக்க லாகா அரண் (குறள்: 42)

என்று அறத்தையும் அதனால் வரும் நலத்தையுமே கொள்கையாகக் கொள்ள வேண்டும் என்பதான உட்கருத்தில் கட்டளையாக அமைந்துள்ளது. ஆனால் பொருள் பற்றிய கருத்து பொருளியலார் கோட்பாட்டின்படி உற்பத்தியில் பயன்படுத்துவதற்கு மனிதனால் உருவாக்கப்பட்ட சாதனங்கள் யாவும் மூலதனமாகும். இங்கும் பருப்பொருளே முதன்மை பெறுகிறது. ஆயின் வள்ளுவமோ இரு இடங்களில் மட்டுமே பொருளியல் விதிகள் கூறும் முதலின் முதன்மை பற்றிப் பேசுகிறது. முதல் இல்லார்க்கு ஊதியம் இல்லை (449, 463) என்றும் உரைக்கின்றார்.

ஆயின் முதன்மைக் கொள்கையாகப் பொருள் ஈட்டல் பேசப்படவில்லை. ஆனால் பொருள் பற்றிய கருத்து ஆழமான பொருளில் பெரும்பான்மை இடங்களில் தென்படுகிறது. இதனை வள்ளுவர் செல்வம் என்ற சொல்லை 27 இடங்களிலும், பொருள் என்ற சொல்லை 69 குறட்பாக்களில் 76 முறையும், ஏனைய சொற்களைப் பிற இடங்களிலும் பயன்படுத்துகின்றார் என்ற முருகன் கூற்றால் உணர இயலுகிறது. இங்கு பொருளைப் பொருளுக்காகவே தேடும் மேலை நாட்டுச் சிந்தையினின்றும் மாறுபட்டு அருள் உடைமை அன்புடைமைக்காகப் பொருள், அதுதான் உண்மையான பொருள் என்பதை உறுதிப்படுத்துகின்றார்.

**தொழிலமைப்பு நிர்வாகம்:** உற்பத்திக் காரணிகளை இணைக்கும் பணியை அமைப்பு செய்கின்றது. இதைச் செய்பவர் தொழில் முயல்வோர் எனப்படுகின்றார். இவர் ஆபத்துக்களை ஏற்றுத் தொழிலை நடத்துகின்றார்.

வள்ளுவரும் தொழிலமைப்பு, தொழில்முயல்வோர் பற்றித் தெரிந்து செயல்வகை தெரிந்து தெளிதல், தெரிந்து வினையாடல் என்ற மூன்று அதிகாரங்களில் விளக்கி உரைக்கின்றார். இங்கும் தான், தனது, தனக்காக என்ற நிலைகளையெல்லாம் பேசவில்லை. உலகத்தாரும், நன்மை பயக்கும் செயலுமே அழுத்தம் கொடுத்துப் பேசப்படுகிறது. வள்ளுவர் வாழ்ந்த காலம் முடியாட்சிக் காலம் என்பதால் அரசே அனைத்தையும் நிர்வகிக்கும் பொறுப்புடையதாகப் பேசப்படுகிறது. ஆயின் அரச நிர்வாகம் பற்றிய பதிவுகள் கூட எம்முறைப்பட்ட ஆட்சி அமைப்புக்கும் பொருந்தும்வண்ணம் அமைந்துள்ளதை

இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு (குறள்: 335)

என்ற குறட்பாவின் வழி

இயற்றல் - வருவாய் (Revenue)

ஈட்டல் காத்தல் - நிதியாட்சி (Finanicial administration)

வகுத்தல் - செலவ (Expenditure) என்று எந்த வகை ஆட்சிக்கும் ஏற்புறும் நிலையில் பகுத்துப் பொருத்திக் காட்டும் முருகரத்தினம் கருத்தால் வள்ளுவர் எக்காலத்துக்கும் யாவர்க்கும் பொருந்தும் நன்மை பயக்கும் நிர்வாக அமைப்புப் பற்றிய சிந்தையைப் பதிவாக்கியிருப்பதும் புலப்படுகிறது.

**V. இன்றைய பொருளாதாரக் கொள்கைகளும், குறட்சிந்தையும்:** அ. திட்டமிட்ட பொருளாதாரம்: தற்போது எந்த நாடும் தன் தேவைக்கான உற்பத்தியில் தன்னிறைவடையவில்லை. ஒன்றில் உபரி காணப்படுகிறது. ஒன்றில் பற்றாக்குறை தென்படுகிறது. தேவையும் அளிப்பும் சம நிலையடையும் நிலையில் தமக்கு அருமைப்பட்ட பொருளை உபரியாகக் கொண்டுள்ள நாட்டிலிருந்து பெற்றே தன் நிறைவைச் சமன் செய்து கொள்கிறது. இதற்கு உலகப் பொருளாதார ரீதியாக ஒன்றிணைய ஒவ்வொரு நாடும் புதிய பொருளாதாரக் கொள்கையை உருவாக்கியுள்ளது. தாராளமயமாக்கலும் உலக வர்த்தக நிறுவனத்தில் அங்கத்தினராகும் நிலையும், புத்தலையாக வேகம் கொண்டு எழுகிறது. இதனை "ஒவ்வொரு நாடும் மற்ற நாடுகளை ஏதோ ஒரு காரணத்திற்காகவோ, அல்லது சில தேவைகளுக்காகவோ சார்ந்து உள்ளது. ஒரு நாடு மற்றொரு நாட்டுடன் பொருளாதார

ரீதியாக உதவி செய்வது சர்வசாதாரணமாகப் போய்விட்டது. ஐக்கிய கூட்டு சபையின் பொருளாதார மற்றும் நிறுவனங்களும் உலகில் உள்ள பின்தங்கிய நாடுகளின் பொருளாதார வளர்ச்சியில் முக்கியப் பங்கு வகிக்கின்றன" என்பார் அறம். இதமையே வள்ளுவர் பொருள் ஈட்டலின் நோக்கம் அன்பும் அறனும் உடையதாக இருக்க வேண்டும் என்று முன்னரே பதிவாக்கியுள்ளார்.

நம்நாடு பொருளாதார வளர்ச்சியில் முழுமையான முன்னேற்றம் அடைவில்லை. வளர்ந்து வரும் நாடுகளில் ஒன்றாகவே உள்ளது. வளர்வதற்கு திட்டங்களைத் தீட்டிச் செயல்படுகிறது. இன்றைய இந்தியாவின் பொருளாதாரக் கொள்கை 10வது ஐந்தாண்டுத் திட்டமாகும் (2002-2007). இதில் முன்பிருந்ததைவிட 5 சதவிகிதம் வளர்ச்சியினைத் திட்ட ஆண்டுகளில் அடைய வேண்டும் என்ற எண்ணத்துடன் வகுக்கப்பட்டது. இங்கு திட்டங்களின் அடிநாதம் மனித நலம் பற்றியதாகும். அருள், அன்பு சார்ந்த மொத்தத்தில் மனிதவள மேம்பாட்டினைக் குறிக்கோளாகக் கொண்டது. இந்தியாவின் இத்திட்டம் கொள்கையளவில் வள்ளுவத்துடன் ஒத்தமைவு கொள்கிறது.

ஆ. புதிய பொருளாதாரக் கொள்கை: 1991-க்குப் பிறகு பேரளவில் வர்த்தகம் தாராளமயமாக்கபட்டது. இந்திய 1995ல் உலக வர்த்தக நிறுவனத்தின் உறுப்பினர் ஆகிவிட்டது. இதனால் இறக்குமதிக்கு உள்ள தடைகளை நீக்க வேண்டிய சூழ்நிலையிலும், இறக்குமதியின் மீது உள்ள வரியைக் குறைக்க வேண்டிய கட்டாயத்திலும் உள்ளது. இந்தியா உலக வர்த்தகத்திற்கு வசதியாக உருவாக்கவும், உலகமயமாக்கவும் உள்ளது. இந்தியா உலக வர்த்தகத்திற்கு வசதியாக உருவாக்கவும், உலகமயமாக்கவும் புதிய பொருளதாரக் கொள்கை வழி வகுக்கிறது. இதற்குரிய தடங்களும் இறைமாட்சி அதிகாரத்தில்,

படைகுடிகூழ் அமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு (குறள்: 381)
இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு (குறள்: 386)
இன்சொலால் ஈத்தளிக்க வல்லார்க்குத் தன்சொலால்
தான் கண்டனைத் திவ் உலகு (குறள்: 387)
கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையனாம் வேந்தர்க்கு ஒளி (குறள்: 390)

என்ற குறட்பாக்களில் பதிவாகியுள்ளன. நல்லுறவு, கொடைத்தன்மை, வருவாயக்குரிய திட்டமியற்றல், வேண்டுபவர்க்குப் பொருளீந்து காத்தல், ஈகைத் தன்மை, கருணை, குடிகளைத் தளர்ச்சியின்றிக் காத்தல், ஆகிய அனைத்தையும் பற்றி, தான் வாழ்ந்த சூழலுக்கேற்ப அரசனுக்குரிய சிறப்புக்களாக உரைக்கின்றது வள்ளுவம். ஆயின் இன்றைய உலகமயமாக்கல் தத்துவமோ முழுமையாக வணிக நோக்கத்தில்தான் செயல்படுகிறதே தவிர அன்பு, கருணை பற்றிய வள்ளுவரின் சிந்தையின் அடிப்படையில் செயல்படுவதாக இல்லை.

**உலக வர்த்தக நிறுவனம்: (WTO):** 146 நாடுகளை உறுப்பினர்களாகக் கொண்டது. உறுப்பினர்களிடையே பொதுக் கருத்து ஏற்பட்டாலன்றி WTO அமைப்பின் தீர்மானங்களை நிறைவேற்ற முடியாது என்பது நியதி. பொருளாதார நிலை, அரசியலமைப்பு, அடிப்படைக் கொள்கை ஆகியவற்றில் மாறுபட்டு இருக்கும் நாடுகள் தங்கள் உள்நாட்டுத் தேவைகளை விடுத்து எந்தவித வாணிபத் தடைகளும், வரி நிர்பந்தங்களும் இல்லாமல் ஏற்றுக் கொள்ள வருவது ஐயத்திற்குரியது.

உரிய வர்த்தக உறுப்பினர் நாடுகளில் 75 சதவிகிதத்துக்கு மேல் வளர்முக அல்லது ஏழை நாடுகள் என்பது உண்மை. WTO நோக்கத்தை எட்டவேண்டுமெனில், எவ்விதத் திணிப்பும, நிர்பந்தமு் இன்றி பிராந்திய உணர்வுகளையும் எதிர்பார்ப்புக்களையும் கருத்தில் கொண்டு எந்தத் தரப்பினரையும் பாதிக்காத ஒரு விளாபார ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதுதான் ஒரே வழி. இதுவம் வள்ளுவத்தின் இறைமாட்ச உரைக்கும் கருத்துக்களை, பொதுமை உணர்வை அடியொற்றித்தான் அமைந்துள்ளது. இன்று உலக நாடுகளின் அனைத்துப் பொருளாதார அமைப்புக்களும், திட்டங்களும் மிக மிகத் தாமதமாக வள்ளுவக் கொள்கைகளை ஒட்டிச் செயல்படுகின்றன. இக்கருத்துக்களின் பொதிவில் ஆட்பட்ட ஆல்பர்ட் சுவைட்சர் உலக இலக்கியங்களிடையே எந்த ஓர் இலக்கியமும் இத்தனை சிறப்பாக அமையவில்லை என்கின்றார்.

**முடிவுரை:** மொத்தத்தில் உலக நாடுகளே மனித எண்ணிக்கையை மனித வளமாக மாற்ற முயற்சிப்பின், தீவிரவாதம், பயங்கரவாதம் போன்ற மனிதமற்ற செயல்களைக் கைவிட வழியமைப்பின் வள்ளுவர் கூறும் மக்கள் மைய நலன்சார் பொருளியல் கொள்கை நிறைவுறும்.

மற்றொரு கோணத்தில் வள்ளுவத்தைச் சிந்திப்பிள், எது இல்லை அது வேண்டும் என்ற உணர்வே மொத்தத்தில் பொருண்மை கொண்டு இலங்குகின்றது. வள்ளுவர்வாழ்ந்த காலமும் தற்காலம் போன்றே மனிதமற்ற பொருட்பேய் பிடித்த காலமாக இருந்திருக்கலாம். அதனால்தான் அறமற்ற செயல்களைச் செய்யாதே என்பதை கடிந்து உரைக்காமல், தன் எண்ணத்தை மென்மையான இழைகளால் மிகக் கவனமாக நெய்திருக்கிறார். சொல்ல விரும்பியதை அழுத்தமாகச் சொல்லியிருக்கிறார். வள்ளுவக் கொள்கை எங்கும், எவர்க்கும் ஏற்புடைத்து – மனித வளம் மாண்புடையதாகப் போற்றப்படும் நாட்களில். இதற்கு உலகமே ஒருமித்த மன வளம் உடையதாக மாற முயற்சிக்க வேண்டும். உலகம் என்பது எங்கோ உள்ளதன்று. தாம் ஒவ்வொருவருமே உலகின் அங்கம்தான். முயற்சி மெதுவான வேகமாக எழுந்தாலும் அனைவர்க்கும் நலம் எனும்போது தளர் நடையும் ஒளிவாழ்வுக்கு இனிதாகத் தென்படுகிறது.

**அடிக்குறிப்பு:**

1) சடகோபன். கோ. பொருளாதாரக் கொள்கைகள், ப.17
2) முருகன். ப. திருவள்ளுவரின் பொருளியல் சிந்தனைகள், ப.58-59
3) முருகரத்தினம். தி. டாக்டர். குறள் கண்ட பொருள் வாழ்வு, முன்னுரை LI.ii & iii
4) முருகன். ப. முந்நூல், ப. 96-96
5) முருகரத்தின்ம். தி. டாக்டர். முந்நூல், “உலக சிந்தனை” ப. 73-74
6) Aram. Thirukkural, Its relevance for the modern world, Tmt. Sornammal Endowment lectures on Tirukural, 1971, P. 402.
7) Misra. S.K., & Puri, V.K., Indian Economy, P. 930-943
8) Govt. of India, Planning commission, tenth five year plan, 2002-07,Vol.1.
9) Misra S.K. & Prui, V.K., முந்நூல்,ப. 573
10) ஆராவமுதன். அ. உலகமயம் - என்ன பயன்? – தினமணி 2004.
11) மோகனராசு. கு. திருவள்ளுவரின் குறிக்கோளியலும், உலகப் பொதுமையியலும், திருக்குறள் ஆய்வு – 8, ப. 240

**முதன்மைச் சான்றாதாரங்கள்:** திருக்குறள் - பரிமேலழகர் உரை, நாமக்கல் வெ. ராமலிங்கம் உரை

1) சடகோபன். கோ – பொருளியல் கோட்பாடுகள்,

**துணைமைச் சான்றாதாரங்கள்:**

| | | |
|---|---|---|
| 1) சாரங்பாணி. கோ | : | திருக்குறள் உரைவேற்றுமை |
| 2) முருகன் . ப | : | திருவள்ளுவரின் பொருளியல் சிந்தனைகள், எட்டவாது உலகத்தமிழ் மாநாடு சிறப்பு வெளியீடு 41. பி. சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், சென்னை. |
| 3) முருகரத்தினம். தி. டாக்டர் | : | குறள் கண்ட பொருள் Vol. III & IV. |
| 4) முருகரத்தினம். தி. டாக்டர் | : | வள்ளுவர் வகுத்த பொருளியல் (கருத்தரங்கக் கட்டுரைகள்) |
| (தொகுப்பு & பதிப்பு) | : | திருக்குறள் ஆய்வகம், மதுரைப்பல்கலைக்கழகம். |
| 5) மோகனராசு. கு. டாக்டர் | : | திருவள்ளுவரின் குறிக்கோளியலும் உலகப்பொதுமையிலும், திருக்குறள் ஆய்வு. 8, 1983 |
| 6)……….. | : | தினந்தந்தி தொழிலமலர். 22.10.2004.ப.41. |

**ஆங்கில நூல்கள், நாளிதழ்கள்:**

1. Thirumathi Sornammal Endowment Lectures on TIRUKKURAL Vol. I & II.

2. Misra S.K. Puri. V.K: Indian Economy, Himalaya Publishing house, 22nd edition, 2004.
3. Natarajan. B. Dr.: Relevance of Valluvam to Modem Political economy, Institute for TECHNO – economic studies, P.61
4. Economic Times; 10, 12.1.05